CC.NO. 109/2018 Date:10.07.2025

Page No.

**அ.சா. 1 கிருஷ்ணகுமார் த/பெ. கங்காதரன் வயது.44.–**

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – (எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை)**

எதிரி ராஜகோபால் எனது சித்தப்பா என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவயிடம் என் தந்தைக்கு பாத்தியப்பட்டது. சம்பவயிடம் என்தந்தைக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதாரமாக நான் போலீசாரிடம் ஆவணம் கொடுத்துள்ளேன். எனக்கு பாத்தியப்பட்ட மரங்களில் நான் தேங்காய் தள்ளியதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். என் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தென்னை மரங்கள் இல்லை என்றாலும், மாறாக எதிரிக்கு பாத்திப்பட்ட நிலத்தில் தான் தென்னை மரங்கள் உள்ளதாக மாதிரி வரைபடத்தில் காண்பிக்கபட்டது என்றால் சரியல்ல. என் சித்தப்பா ராஜகோபலுக்கு சம்பவயிடத்தில் நிலங்களே இல்லை. என் சித்தப்பா ராஜாகோபலுக்கு சம்பவயிடத்தில் தென்னை மரங்களுடன் கூடிய நிலம் உள்ளதாக போலீசார் மாதிரி வரைபடத்தில் காண்பித்திருந்தால் தவறு என்றால் சரிதான். மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்தபோது ஒரு நபர் கத்தியில் தாக்கியதாக மட்டுமே தெரிவித்தேன். அந்த கத்தியை தியாகராஜன் எடுத்து வைத்து போலீசாரிடம் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. யார் கத்தியை போலீசாரிடம் ஒப்படைத்தார்கள் என்றால் எதிரி கத்தியை பயன்படுத்தி விட்டு சம்பவயிடத்திற்கு அருகாமையில் போட்டு விட்டு சென்று விட்டார். அங்கு வந்த போலீசார் அதை கைப்பற்றினார்கள். யார் முன்னிலையில் கத்தி கைப்பற்றப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் அடிபபட்ட பிறகு சுயநினைவுடன் இருந்தேனா என்றால் சரிதான். என்னுடைய புகாரி தியாராஜன் தான் கத்தியை எடுத்து வைத்திருந்தார் என்று தெரிவித்துள்ளேன் என்றால் இருக்கலாம்.

இந்த சொத்து சம்மந்தமாக எங்களுக்கும் எதிரிக்கும் பல வருடங்காலமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். நான் தவறி விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரி மீது தவறாக புகார் அளித்து தற்போது பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை பல முறை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று முதல் விாசரணையில் தெரிவித்தது போல் நான் புகாரிலும் தெரிவித்தேன் என்றால் சரிதான். எதிரி அடிக்கடி எங்களுக்கு தெரியாமல் எங்கள் மாங்காய்களை பறிக்கும் விவரத்தை போலீசாரிடம் தெரிவித்தேன். நான் ஆம்புலன்சில் மருத்துமனைக்கு நானும் எனது மனைவியும் சென்றோம். சம்பவத்தை யார் நேரடியாக பார்த்தாதர்கள் என்றால் நான் தகவல் கொடுத்த பின்பு எனது மனைவி

மற்றும் தியாராஜன் வந்தார்கள். எதிரிக்கு சுமார் 70 வயதிருக்கும். வயதானவர் என்னை தாக்கியதாக நான் தெரிவித்துள்ள விவரம் தவறு என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

சாட்சியின் கையொப்பம்